
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1219**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

**63**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



குடும்பத்துடன் செ.தெ.நாயகம்

# பெரியாருடன் இடைநில்லாத பயணம்!

*1919-இல் திருவல்லிக்கேணி கூட்டுறவுப் பண்டக சாலையின் செயலாளராகப் பணியில் இணைந்தார் செ.தெ.நாயகம். 1921-இல் கூட்டுறவுத் துறையின் துணைப் பதிவாளராகப் பொறுப்பேற்று, 13 ஆண்டுகள் அந்தப் பணியில் நீடித்தார். பணிக்காலத்தில், பல புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, ஏற்கெனவே இருந்த சங்கங்களின் தரத்தை மேம்படுத்தினார். நீதிக்கட்சிக் காலத்தில், வகுப்புவாரி உரிமை முதன்முதலாக அமலானது, இவரது துறையில்தான் என்பது வரலாறு. வேலூரில் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி சரிவர இயங்காமல் இருந்ததால், அதன் முதல்வராக செ.தெ.நாயகம் நியமிக்கப்பட, ஆறு மாதங்களில் சரிசெய்தார்.*

*நீதிக்கட்சியின் மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் இவர் கொண்டிருந்த பற்று மிகத் துய்மையானது. இந்தக் கொள்கைப் பாதையில்தான் தன் வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டார். ஓய்வுபெற்ற பின்னர், முழுநேரமாகவே அரசியல் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார். தன் மனைவி, குழந்தைகளை நீதிக்கட்சி மாநாடுகள், கூட்டங்களில் பங்கெடுக்கச் செய்தார். அந்த வகையில், 1933-இல் ஈரோட்டில் நடந்த கோவை மாவட்டச் சுயமரியாதை இயக்கப் பெண்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் சிதம்பரத்தம்மையார். 1934-இல் 'சுயமரியாதை இளைஞர் மன்ற'த் தலைவரானார். 1935-ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியுற்ற நிலையில், நீதிக்கட்சியை வலுப்படுத்த, ஊர்ஊராகச் சென்று கூட்டங்களில் பேசினார் பெரியார். அப்போது, சுற்றுப்பயணக் குழுவின் செயலாளர்களாக பெரியாருடன் செ.தெ.நாயகமும் இருந்தார். 'திராவிடன்' இதழின் ஆசிரியராகச் சில காலமும், 'விடுதலை' நாளிதழின் கௌரவ மேலாளராகவும் பணியாற்றியுள்ளார்.*

*1937-இல் முதல் இந்தி எதிர்ப்புப் போர் வெடித்தபோது, முன்னணி வீரராகத் தன்னையும் இணைத்துக்கொண்டவர் செ.தெ.நாயகம். சென்னையில் இந்தி எதிர்ப்புப் போரை நடத்தவும், அதற்கான நெறிமுறைகளை வகுத்துத் தரவும் பெரியாரால் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டவர் செ.தெ.நாயகம். தியாகராயர் நகரில் இவருக்குச் சொந்தமான இடத்தில் இந்தி எதிர்ப்பு தலைமை நிலையத்தை அமைத்தார். இங்கிருந்துதான் ஈழத்து அடிகள் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, முதல்வர் இல்லம் நோக்கி நகர்ந்தது. செ.தெ.நாயகம் கைதுசெய்யப்பட்டார். 16.12.1938 அன்று இவர் விடுதலை செய்யப்பட்ட போது, நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக பெத்தநாயக் கன்பேட்டைக்கு அழைத்துச்செல்லப் பட்டார். வழியெங்கும் மக்கள் கூடி வரவேற்பு அளித்தனர். பாராட்டு விழாவும் நடைபெற்றது. பின்னர், குடும்பத்துடன் பெரியாரைச் சந்திக்க ஈரோடு புறப்பட்டார். அங்கும் ஈ.வெ.கிருஷ்ணசாமி, 'விடுதலை' ஆசிரியர் பண்டிதர் முத்துசாமி பிள்ளை ஆகியோர் தலைமையில் மக்கள் வரவேற்பு அளித்தனர்.*

*16.07.1939-இல் இராமநாதபுரம் மாவட்ட 3-வது தமிழர் மாநாடு அருப்புக்கோட்டையில் நடைபெற்றது. செ.தெ.நாயகம் திறந்துவைத்த இந்த மாநாட்டில், 'இலங்கை அரசால் அங்கு தமிழர்களுக்குத் தொல்லை ஏற்பட்டால், அதன் விளைவுகளுக்கு இந்திய அரசும்தான் பொறுப்பு' என்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்து, 10.08.1939-இல் ஈரோடு பெரியார் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செ.தெ.நாயகம் பேசும்போது, "இலங்கையில் தமிழ் மக்கள் அரசால் கொடுமைப்படுத்தப்படுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது" என்று பேசினார்.*

*'தமிழ்நாடு புரோகித மறுப்பு சங்க'த்தின் தலைவர், 'நாத்திகர் இயக்க'த்தின் துணைத் தலைவராகவும் இருந்துள்ளார். பிறந்த மண்ணிலும் பணியாற்ற வந்த மண்ணிலும் கல்விச்சேவையைத் தொலைநோக்குச் சிந்தனையுடன் ஆற்றிய செ.தெ.நாயகம், ஓய்வுக்காலத்தில் தமிழ்நாடெங்கும் சுற்றிச்சுழன்று, இயக்கத்திற்காகவே வாழ்ந்து மறைந்தார். 13.12.1944-இல் செ.தெ.நாயகம் காலமானபோது, 'ஆருயிர்த் தோழர் மறைந்தாரே' என்று 'குடி அரசு' இதழில் தலையங்கம் தீட்டினார் பெரியார். 'திராவிடம் பெற்ற வீரர் ஆரியத்தோடு தொடுத்த போர் முடியும் முன்னரே மறைந்தாரே' என மனமுடைந்தார் அண்ணா.*

**...பயணம் முற்றும்**

## தடையைக் கண்டித்தால் தடையா?

மே 31, 2026 அன்று புதுக்கோட்டையில், 'திருப்பரங்குன்றம்' ஆவணப்படத் திரையிடல் தடுக்கப்பட்டதற்குக் கண்டனம் வலுத்து வரும் நிலையில், அது தொடர்பாக, திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்ட கண்டன அறிக்கையை ஃபேஸ்புக் நிர்வாகம் இந்தியாவில் தடை செய்திருக்கிறது. அரசு சார்பில் இந்தப் பதிவைத் தடுக்கச் சொல்லி வந்த கோரிக்கையின்படி, தடை செய்யப்பட்டதாக ஃபேஸ்புக் நிர்வாகம் பதில் அளித்திருப்பதும், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள தமிழ்நாடு டிஜிட்டல் ஊடகவியலாளர்கள் சங்கம், "எந்தச் சட்டத்தின் காரணமாக, யாருடைய தூண்டுதலின் பெயரில், காவல் துறையினர் 'திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ்' ஆவணப்படத் திரையிடலைத் தடுத்தார்கள்? யாருடைய உத்தரவு, யார் அந்த மேலிடம்? என்ற கேள்விகளுக்கு, இன்று வரை எந்த அதிகாரபூர்வ விளக்கமும் வழங்கப்படவில்லை. இந்நிலையில், இக்கேள்விகளை எழுப்பிய திராவிடர் விடுதலைக் கழக அறிக்கை, எந்தச் சட்டத்தினால் முகநூலில் முடக்கப்பட்டுள்ளது? அப்படி முடக்க சட்டபூர்வ கோரிக்கை வைத்தது யார்? மாநிலத்தை ஆளும் த.வெ.க.வா? ஒன்றியத்தை ஆளும் பி.ஜே.பி.யா? அல்லது இரண்டுமா? அல்லது வேறு தரப்பா? ஆவணப்படத்தைத் திரையிட மேலிடம் சொல்லித் தடை, அதைக் கண்டித்து அறிக்கை வெளியிட, உள்நாட்டு சட்ட விதிகளின்படி வந்த கோரிக்கை அடிப்படையில் என்றும் காரணம் சொல்லி, முகநூலில் தடை! இது ஜனநாயக நாடுதானா? கருத்துச் சொல்லும் உரிமையை அளித்துள்ள அம்பேத்கர் இயற்றிய அரசமைப்புச் சட்டத்தின்படி நடக்கும் நாடுதானா?

தமிழ்நாடு த.வெ.க. அரசே, இந்திய பி.ஜே.பி. அரசே! இது கருத்துரிமை குறித்த கேள்வி. இது ஊடகச் சுதந்திரம் குறித்த கேள்வி. இது ஜனநாயக உரிமைகள் குறித்த கேள்வி! அரசமைப்புச் சட்டம் வழங்கிய கருத்துரிமையும் மதச்சார்பின்மையும்தானே உள்நாட்டுச் சட்டம்? வேறு எந்தச் சட்டத்தினால் திருப்பரங்குன்றம் ஆவணப்படத் திரையிடல் தடுக்கப்பட்டது? எந்தச் சட்டத்தினால், யாருடைய கோரிக்கையால், கருத்துரிமைக்கு ஆதரவாக வெளியிடப்பட்ட திராவிடர் விடுதலைக் கழக அறிக்கை முகநூலில் முடக்கப்படுகிறது? ஜனநாயகவாதிகளே, உரிமைக்கு எதிரான இந்த முடக்கத்தை உடைக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்! அரசமைப்புச் சட்டத்தின் ஆன்மாவைக் காப்போம்" என்று கண்டித்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



இளவேனில்



### "நானும் இலக்கியவாதிதான்!"

2006-ஆம் ஆண்டு, 'மாத்யமம்' மலையாள வார இதழுக்காகத் தலைவர் கலைஞர் அவர்களைப் பத்திரிகையாளர் டி.டி.ராமகிருஷ்ணன் நேர்காணல் செய்ய, புகைப்படக் கலைஞரான நான் சென்றிருந்தேன். அப்போது, தலைவர் அவர்களின் பல புகைப்படங்களை எடுத்தேன். அவற்றில், அவர் என்னுடைய கேமராவைக் கையில் பிடித்திருப்பது போன்ற ஒரு புகைப்படமும், அவர் தாயாரின் ஓவியம் அவரைப் பார்ப்பது போன்ற தோற்றத்தில் அமைந்த மற்றொரு புகைப்படமும் மிகவும் பேசப்பட்டவை. தலைவருடன் நானும் இணைந்து ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்பியபோது, அருகில் இருந்த கனிமொழி எம்.பி அவர்கள், இந்தப் புகைப்படத்தை எடுத்துத் தந்தார்கள். "தமிழ்நாட்டின் இலக்கிய ஆளுமைகளைத் தொடர்ந்து ஆவணப்படுத்தி வருபவர்" என்று கனிமொழி அவர்கள் என்னைப் பற்றி அறிமுகம் செய்கையில், தலைவர் புன்னகையுடன், "நானும் இலக்கியவாதிதான்!" என்று கூறி சிரித்தார். அந்தச் சந்திப்பின் இனிய தருணம், என் நினைவுகளில் நிழலாடிக்கொண்டே இருக்கிறது.

**– புதுவை இளவேனில்,**
**புகைப்படக் கலைஞர், புதுச்சேரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

**113**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# கழகத்தினரின் மணமேடையே கொள்கை மேடைதான்!

*முதலமைச்சர் என்ற பொறுப்புக்குரிய எந்தத் தகுதியுமில்லாமல் பதவிக்கு வந்திருப்பவர், 'திருமண வீட்டில் தி.மு.க.வினர் கதறுகிறார்கள்' என்று பேசியிருக்கிறாரே?*

*உண்மையில், கதறு... கதறு என்று அந்த நிகழ்ச்சி முழுவதும் கதறியிருப்பவர், முதலமைச்சர் பொறுப்புக்கு வந்திருப்பவர்தான். தி.மு.க.வினர் இல்லத்தின் திருமண நிகழ்வுகள் என்பது வெறும் வாழ்க்கைச்சடங்கு அல்ல. அது கொள்கைத் திருவிழா. திராவிட இயக்கம் மீட்டெடுத்த தமிழர் வாழ்வியல் பண்பாட்டு அடையாளத்தின் வெளிப்பாடு. 1928-ஆம் ஆண்டு, அன்றைய இராமநாதபுரம் ஜில்லா, இன்றைய விருதுநகர் மாவட்டம் சுக்கிலநத்தம் என்ற இடத்தில், தந்தை பெரியார் தலைமையில், அவருடைய 'சுயமரியாதை இயக்க'த்தில் இணைந்திருந்த 'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ.விசுவநாதம் போன்றவர்களும் பங்கேற்று, முதல் சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்தனர். ஆரியப் பண்பாட்டின் அடையாளங்களாக, நம் குடும்பத் திருமணங்களில் புகுந்துவிட்ட வேதமந்திரங்கள், ஹோமப் புகை, புரோகிதம் உள்ளிட்ட சடங்கு சம்பிரதாயங்களை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டு, தமிழ் இலக்கியம் காட்டுகிறபடி, செம்புலப் பெயல் நீர்போல அன்புடைய நெஞ்சங்கள் கலக்கின்ற வகையில், தமிழில் வாழ்த்துகள் சொல்லி நடத்திவைப்பதுதான் சுயமரியாதைத் திருமணமாகும்.*

*பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட திராவிடத் தலைவர்கள் இந்த சுயமரியாதைத் திருமண முறையை ஊக்குவித்து, பல இடங்களுக்கும் நேரில் சென்று நடத்திவைத்தனர். ஆனால், இத்தகைய திருமண முறையை, இந்துத் திருமண வகையில் சேர்க்க முடியாது என நீதிமன்றம் உத்தரவிட்டு, நிராகரித்துவிட்டது. இதனால், சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்ட அங்கீகாரம் கிடைக்கவில்லை. சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர்களை, கணவன்-மனைவியாகச் சட்டம் கருதாத நிலையில், அவர்களின் பிள்ளைகளுக்கான வாரிசுரிமை - சொத்துரிமை குறித்த கேள்விகளும் எழுந்தன.*

*1967-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் முதலமைச்சரானார் பேரறிஞர் அண்ணா. அவர் தலைமையிலான தி.மு.க. அரசு, சுயமரியாதைத் திருமணச் சட்டத்திற்கு அங்கீகாரமளிக்கும் வகையில், சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது. 'தமிழ்நாடு இந்துத் திருமணத் திருத்தச் சட்டம்-1967' என்கிற அந்தச் சட்டத்தின்படி, அதற்கு முன்பு சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கும் சட்ட அங்கீகாரம் வழங்கி, புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, புரோகிதம் - ஹோமம் - மந்திரங்கள் இவை எதுவும் இல்லாமல், தாலி கட்டியோ அல்லது மாலை மாற்றியோ உறுதிமொழியேற்று நடைபெறும் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்ற நிலை ஏற்பட்டது. இது தமிழ்ப் பண்பாட்டில் தி.மு.க. அரசு ஏற்படுத்திய சட்டபூர்வமான மறுமலர்ச்சி. 'எமர்ஜென்சி என்கிற நெருக்கடி நிலைக் காலம்', பேச்சுரிமைக்குக் காவல் துறை தடை விதிக்கின்ற சூழல், பொதுக்கூட்டங்கள் நடத்த முடியாத நிலை உள்ளிட்ட பல்வேறு காலகட்டங்களிலும் தி.மு.க.வினரும் தி.க.வினரும், திராவிட இயக்க உணர்வுள்ளவர்களும் சுயமரியாதைத் திருமண மேடைகளைத்தான் கொள்கை விளக்கப் பரப்புரை இடங்களாகவும், அரசியல் கருத்துகளைப் பெண்கள் உள்ளிட்ட பொதுமக்களிடம் எடுத்துச் சொல்கின்ற இடங்களாகவும் பயன்படுத்தினர். இவற்றைப் பார்த்து, அப்போதிருந்த ஆட்சியாளர்கள் கதறியது போலவே இப்போது ஆட்சியில் இருப்பவரும் கதறுகிறார்.*

**...வினா தொடரும்.**

## நம் வரலாறு

### சிறு பொறி நெருப்பாகும்!

1954-ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தல்களில் (ஜில்லா போர்டு) தி.மு.கழகத் தோழர்கள் சிலர், தனிப்பட்ட முறையில் ஈடுபட்டனர். சிலர் வெற்றி பெற்றனர். இதுகுறித்து, 'திராவிட நாடு' இதழில் எழுதிய பேரறிஞர் அண்ணா, 'தி.மு.கழகத்துக்கு இத்தகைய அமைப்புகளில் இடமளிப்பது, சிறுபொறி பெருநெருப்பாகி விடும் என அஞ்சிய கட்சிகள், முளையிலேயே கிள்ளவிட வேண்டும். மூக்கறுத்து முக்காடிடச் செய்து மூலையில் உட்காரச் செய்ய வேண்டும் என முனைந்து நின்று எல்லா வகையான எதிர்ப்பையும் உருட்டித் திரட்டித் தாக்கின. எனினும், சில குறிப்பிடத்தக்க வெற்றிகள் நமக்குக் கிடைத்துள்ளன'' என்று தேர்தல் எதிர்ப்புகளை எழுதினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900